Job Access

Driving disability employment

# தகவல் ஏடு

# ‘உடலியலாமை உள்ளோருக்கான வேலைவாய்ப்பு சேவைகள்’

அரசாங்கத்தின் வேலைவாய்ப்பு சேவைகள் மற்றும் ஆதரவுதவிகளை வழங்குவதற்காக ஒப்பந்தப்படுத்தப்பட்டுள்ள சேவை வழங்குநர்களே ‘உடலியலாம உள்ளோருக்கான வேலைவாய்ப்பு சேவைகள்’ ஆவர். உடலியலாமை, காயம் அல்லது உடல்நல நிலை ஒன்று உள்ளவர்கள் வேலை ஒன்றைத் தேடியெடுத்து அதைத் தக்க வைத்துக்கொள்ள தகுதி பெறும் ஆட்களுக்கு இவர்கள் உதவுவர்.

உடலியலாமை உள்ளவர்களுக்கும், அவர்களுக்கு வேலை தரக்கூடியவர்களுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தித் தருவதில் DES சேவை வழங்குநர்கள் தேர்ச்சி பெற்றவர்கள். உடலியலாமை உள்ளவர்கள் வேலை தேடுவதில் அவர்களுக்கு உதவுவதற்காக உடலியலாமை உள்ள ஒருவருடைய திறன்கள், கல்வித்தகுதிகள், முந்தைய வேலை அனுபவம் மற்றும் அவர்களது பணிசார் இலக்குகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள இவர்கள் உடலியலாமை உள்ளவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களோடு இணைவாய்ச் செயல்படுவார்கள். வேலைகள் எங்கே கிடைக்கும் என்பதும், உடலியலாமை உள்ளவாகள் எப்படி வேலை ஒன்றைத் தேடியெடுத்து அதைத் தக்க வைத்துக்கொள்வது என்பதும் இவாகளுக்குத் தெரியும்.

உடலியலாமை உள்ள ஒருவர் வேலையில் அமர்த்தப்பட்டதும், DES சேவை வழங்குநர் ஒருவர் அவருக்கு 26 வார காலத்திற்கு பணியிட ஆதரவுதவியை வழங்குவார், மற்றும், தேவைப்பட்டால் எவ்வளவு காலம் தேவைப்படுகிறதோ அவ்வளவு காலத்திற்குப் பணியமர்த்துனருக்கும், பணியாளுக்கும் இவரால் உதவ இயலுமாகலாம்.

உடலியலாமை உள்ள இளவயதுப் பணியாட்களுக்கு வேலை கொடுத்து, அதைத் தக்க வைத்துக்கொள்ள அவர்களுக்கு உதவுவது உட்பட பணியமர்த்துனர்களுக்கு DES-இனால் பலதரப்பட்ட இலவச சேவைகளை வழங்க இயலும்.
DES -இடமிருந்து உங்களால் உதவி பெற இயலுமா என்பதை அறிய ‘மானிட சேவைகள் திணைக்கள’(Department of Human Services (Centrelink))த்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் பகுதியிலுள்ள DES சேவை வழங்குநர் ஒருவருடன் நீங்கள் நேரடியாகவும் பதிவு செய்துகொள்ளலாம். உங்கள் பகுதியிலுள்ள DES சேவை வழங்குநர்களைக் கொண்ட அட்டவணை ஒன்றை ‘ஜாப்ஆக்டிவ்’ (jobactive) அமைப்பினரது jobsearch.gov.au எனும் வலைத்தளத்தில் காணலாம்.

உடலியலாமை உள்ளோருக்கான வேலைவாய்ப்பினைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது ‘ஜாப்அக்ஸெஸ்’ அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.

---

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**